அமைதி மேவும் மதீனா

நகர் வாழும் கோனாம்

அமைதி மேவும் மதீனா

நகர் வாழும் கோனாம்

அண்ணல் முஸ்தபா எங்கள் தாஹா

ரஸூலே

அமைதி மேவும் மதீனா

சமாதான மணியோசை உலகெங்கும்

கேட்க

சமாதான மணியோசை உலகெங்கும்

கேட்க

சதா சேவை செய்தார்கள் சம நீதி ஓங்க

தவழும் தீனின் வாடை

தவழும் தீனின் வாடை

தனை வாழ்வை தந்தார்

அண்ணல் முஸ்தபா எங்கள் தாஹா
ரஸூலே
அமைதி மேவும் மதீனா

அன்னை ஆமினா தங்கள் பாலராய் வந்தே
அன்னை ஆமினா தங்கள் பாலராய் வந்தே
அப்துல்லாவின் ஆத்மீக சுடராய்
திகழ்ந்தே
முன்னோனின் திருத்தூதாய்...
முன்னோனின் திருத்தூதாய்
மக்காவில் பிறந்தார்
அண்ணல் முஸ்தபா எங்கள் தாஹா
ரஸூலே
அமைதி மேவும் மதீனா...

அனாதையாய் புவி மீது பலகாலம்
வாழ்ந்தே
அனாதையாய் புவி மீது பலகாலம்
வாழ்ந்தே
அறை கூவும் திறனோடு அரசாட்சி
செய்தே
குணத்தின் குன்றாய் நின்று
குர்ஆனைத் தந்தார்
அண்ணல் முஸ்தபா எங்கள் தாஹா
ரஸூலே
அமைதி மேவும் மதீனா